# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 103/2015 நாள்.4.9.2025

DW1- திருமதி சரஸ்வதி, க /பெ. திரு. காடவர்கோன்

வாதி தரப்பில்குறுக்குவிசாரணை இல்லை

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்து குடும்ப பூர்விக சொத்து என்றால் ஆமாம். வாதிகள் பிரதிவாதிகள் எல்லாருக்கும் பாகம் கிடைக்ககூடியது என்றால் ஆமாம். சொத்து சம்மந்தமாக தனிபட்ட முறையில் யாராவது கிரய ஆவணம் அல்லது செட்டில்மெண்ட் ஆவணம் எழுத கொடுக்க உரிமை இல்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்து தவிர பூர்விக வீடு கொத்தட்டை கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். வேறுசில சொத்துக்களும் என் அப்பா பெயரில் உள்ளது என்றால் இல்லை. கொத்தட்டை வீடு வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அந்த சொத்தை வழக்கில் சேர்க்க நான் எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆமாம். குடும்பத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகபிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் நான் தகப்பனாருடன் மன வருத்தத்தில் இருந்தேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை மனைபிரிவுகளாக பிரிக்க 2ஆம் பிரதிவாதியிடம் சொன்னோம் என்றும், அவர்தான் செலவு செய்து மனைபிரித்தார் என்றும் சொன்னால் 7பிளாட் விற்று பணம் கொடுத்துள்ளோம். பிளாட் விற்று பணம் கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் பணத்தை 2ஆம் பிரதிவாதிதான் வாங்கி கொண்டார். பணம் கொடுத்தற்கு அவரிடம் ஆவணம் எழுதி வாங்கவில்லை என்றால் ஆமாம். உண்மையில் அவருக்கு பிளாட் விற்று பணம் அவருக்கு போகவில்லை என்றும் என் அப்பா வாங்கி கொண்டார் என்றும் சொன்னால் அப்பாவுக்கு 2லட்சம் மட்டும் கொடுக்கபட்டது மீதியை அவர் எடுத்து கொண்டார். அப்பா 2லட்சம் எடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனைபிரிவுகளாக பிரித்த பின்னர் எல்லோரும் சேர்ந்து 7மனைகளை விற்றோம் என்றால் ஆமாம். அந்த கிரய பத்திரங்களில் குடும்ப சொத்து என்றும், எல்லோருக்கும் பாகம் என்றும் சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். ஆனால் அதன்பிறகு என் அப்பா 2ஆம் வாதி என் சகோதரி மீனாவுக்கு 5பிளாட்டை எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அவருக்கு சொந்தம்போல் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அவ்வாறு எங்கள் எல்லோருக்கும் உரிமை உண்டு என்று சொல்லிவிட்டு பின்பு அவருக்கு மட்டுமே சொந்தம்போல் எழுதி கொடுத்தது தவறு என்றால் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை. 2ஆம்

பிரதிவாதிக்கு சேரவேண்டிய தொகையை கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக எனது தகப்பனார் எங்களோடு சேர்ந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை எல்லோருக்கும் சமபங்கு என்று தாக்கல் செய்துள்ளார். பஞ்சாயத்து எந்த வருடம் எந்த தேதியில் மனைபிரிவு தொடர்பாக நடந்தது என்றால் 2015ஆம் ஆண்டு, தேதி மாதம் தெரியவில்லை. அந்த பஞ்சாயத்தில் என்ன முடிவானது என்றால் எல்லோருக்கும் பாகம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள். பஞ்சாயத்தில் பேசிய விபரத்தை எழுதி கொண்டோமா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எல்லோருக்கும் பாகம் கொடுக்கவேண்டும் என்று பஞ்சாயத்தில் பேசப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரி நித்யாவுக்கு 2ஆம் பிரதிவாதி செலவு செய்து கல்யாணம் செய்து வைத்தார்ள ன்றால் 7பிளாட்டை விற்று வந்த பணத்தை வைத்து செய்தார். நான் சொல்வது தவறு என்றும் 3ஆம் பிரதிவாதி அவர் சொந்த பணத்தை வைத்து திருமணம் செய்துவைத்தார்என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிக்கு மனைபிரிவு செலவு, கல்யாண செலவு, 3ஆம் பிரதிவாதி கல்யாண செலவு 55லட்சம் கொடுக்கவேண்டும் என்று முடிவானது என்றால் சரியல்ல. என் அப்பா தொகையை பஞ்சாயத்தில் ஒப்புகொண்டு தற்போது கொடுக்காமல் ஏமாற்றுவதற்கு இந்த வழக்கை தாக்கல்செய்தார் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி 2015 இல் என் அப்பாவை அடித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி தற்போது என்ன செய்கிறார் என்றால் தெரியாது. 2ஆம் பிரதிவாதி பூண்டி கல்லூரியில் வேலை பார்த்து மாதம் ரூ 5000 சம்பாதித்தாக சொல்கிறேனே அது எப்போது என்றால் 2015க்கு முன்பு. அவர் ரியல் எஸ்டெட், தனிபட்ட JCB வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் முன்பிருந்து இல்லை 7 மனைகளை விற்று பணம் கொடுத்ததிலிருந்து செய்கிறார். தவறான விபரங்களை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாபநாசம் நீதிமன்றத்தில் அ.வ எண். 86/2015 தற்போது என் அப்பாவுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எனக்கு தெரியாமல் அந்த வழக்கை 2ஆம் பிரதிவாதிதாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 2ஆம்பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம். மனைபிரிவுகளில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் விற்கபட்ட 7பிளாட்களில் இருக்கிறார். 7பிளாட் மொத்தம் விலை எவ்வளவு என்றால் ரூ 30 லட்சத்திற்கு மேல் இருக்கும். குடும்ப சொத்துக்களை அனைத்தையும் இந்த வழக்கில் சேர்க்கப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிக்கு கொடுக்கஒப்பு கொண்ட தொகையை கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்கொண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.